# மேல் மாகாண அரச சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் உதவிப் பணிப்பாளர் தரம் 1 வகுப்பு 111 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் -2019

மேல் மாகாண அரச சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் தரம் 1 வகுப்பு 111 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகுதிவாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02.சம்பளக் குறியீடு:**
இப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் SL 01-2016 இற்குரிய 47,615-10x1,335-8x1,630-17x2,170-110,895/ சம்பளப் படிமுறை ஆகும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை அட்டவணை இரண்டிற்கமைய சம்பளம் வழங்கப்படும்.

**03.சேவை நிபந்தனைகள்**
இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறும் உரித்துடையதும் ஆகும். எதிர்காலத்தில் ஓய்வூதியத் திட்டத்திற்காக அரசாங்கத்தால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளுக்கு நீங்கள் இணங்க வேண்டும். மேலும், நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை, சேவை நிபந்தனைகள், மேல் மாகாண சபையின் தாபன விதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுவீர்கள்.

**04.வெற்றிடம் நிரப்பல்**
4.1 மேல் மாகாண அரச சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் தரம் 1 வகுப்பு 111 க்கு வெற்றிடம் நிரப்புவது தொடர்பான இறுதி முடிவினை மேல் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவே மேற்கொள்ளும்.
விண்ணப்பிபதற்கான இறுதித் திகதி **08.03.2019** ஆகும். கோரப்பட்ட நிபந்தனைகளை **08.03.2019** இற்கு முன்னராக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்

**05.ஆட்சேர்ப்பு சம்பந்தமான தகுதிகள் - 5.1 முதல் 5.5 வரை குறிப்பிடப்படும் ஒரு தகுதி நிறைவு செய்யப்பட வேண்டும்.**
5.1.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பட்டத்தை வழங்கும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் / கணினி பொறியியல் அறிவியல் இளமானி பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

5.2 (a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பட்டத்தை வழங்கும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இளமானி பட்டம் பெற்றிருக்க வேண்டும் (பட்டத்தின் 1/3 பகுதி கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் கொண்டமைதல் வேண்டும்)

மற்றும்

(b).பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பட்டத்தை வழங்கும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணினி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும்

5.3. (a). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த நிறுவனம் ஒன்றில் கணினி விஞ்ஞானத்தில் NVQ 07 தகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

(b).சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு ஆண்டுகள் (02) சிறப்பான தொழில்முறை அனுபவம் கொண்டிருத்தல்

5.4.(a) மேல் மாகாண அரச சேவையின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் 1 அலுவலராக இருத்தல் மற்றும் முன்னரான 5 ஆண்டுகளில் திருப்திகரமான சேவை காலம் கொண்டிருத்தல்

மற்றும்

)b(மேற்படி சேவையில் வினைத்திறன் தடைகான் பரீட்சைகளைப் பூர்த்திசெய்திருத்தல்

5.5. )a( மேல் மாகாண அரச சேவையின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் 1 அலுவலராக இருத்தல் மற்றும் முன்னரான 5 ஆண்டுகளில் திருப்திகரமான சேவை காலம் கொண்டிருத்தல்

மற்றும்

(b) 5.1, 5.2, 5.3 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்

)c(மேற்படி சேவையில் வினைத்திறன் தடைகான் பரீட்சைகளைப் பூர்த்திசெய்திருத்தல்

**06. உடல் தகுதி**

மேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்குரிய உடல் தகுதி மற்றும் மனோநிலையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**07. வயது -**

குறைந்தபட்ச வயது -21 வருடம்
கூடிய வயது - 35 வருடம்

மேல் மாகாண அரச சேவையின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் 1, 11 அலுவலராக இருப்பின் வயதெல்லை அவசியமற்றது.

**08. ஏனைய தகுதிகள்**

a) இலங்கைப் பிரஜையாக இருத்தல்
b) சிறந்த நற்பண்புள்ளவராக இருத்தல்
c) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னரான தொடர்ச்சியான 03 வருடங்களுக்கு மேல் மாகணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்
d) விண்ணப்பத்தில் கோரப்பட்ட அனைத்து தகுதிகளும் **08.03.2019** முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்

**09. பரீட்சை விபரங்கள்:**

| வினாத்தாள் | மொத்தப்புள்ளி | நேரம் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| 1.பொது அறிவு | 01 மணி | 100 | 40 |
| 2.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 02 மணி | 100 | 40 |
| 3. பொது விவேகம் | 02 மணி | 100 | 40 |

இந்த கேள்விப் பத்திரங்கள் பதவிக்குரிய கடமைக்கான வேட்பாளரின் தகுதியையும் திறமையையும் சோதிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பரிட்சை போட்டித் தேர்வாக இருந்தாலும், ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40 சதவிகித புள்ளிகள் மற்றும் மொத்த புள்ளிகளில் 50 சதவிகித புள்ளிகள் பெற வேண்டும். எழுத்துக்கள் மற்றும்

எழுத்துப்பிழை தவறுகள் இருந்தால் புள்ளிகள் கழிக்கப்படும். ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிரப்ப புள்ளிகள் பெற்ற ஒழுங்கின்படியே நியமனங்கள் வழங்கப்படும்.

## 10. பரீட்சை வினாத்தாள் பாடத் திட்டம்

| வினாத்தாள் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. பொது அறிவு | எண்ணியல், மொழியியல், கட்டமைப்பு மற்றும் இடைவினைகள் தொடர்பாக வழங்கப்பட்ட பிரச்சினைகள் காரணமாக, பகுப்பாய்வு திறன்கள், தர்க்கரீதியான புரிந்துணர்வு, விளக்கமளிக்கும் திறன், மற்ற சூழ்நிலைகளுக்கு பயன்பாட்டில் உள்ள திறன் மற்றும் முடிவுகளை எடுப்பது ஆகியவற்றில் விண்ணப்பதாரியின் பொதுஅறிவனைமதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவேண்டும். |
| 2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | தகவல்தொழில்நுட்பம் மற்றும் தொடர்பு மேலாண்மை திறன்கள், கருப்பொருள்கள் பகுப்பாய்வு அமைப்புகள், திட்டமிடல் மற்றும் மென்பொருள் அமைப்புகள் பற்றியது. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவேண்டும். |
| 3.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான பொது விவேகம் | தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ICT கையாளுதல் தகவல் தொழில்நுட்பம், நிறுவல் மற்றும் பராமரிப்பு தொடர்பான புதிய அபிவிருத்திக்கான அறிவை அளவிட வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்லா கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டும் |

## 11. பரீட்சைக் கட்டணம்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேல் மாகாண சபைக்கு பரிட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும். இந்த பரிட்சைக் கட்டணம் ரூ.600 ஆகும். மேல் மாகாண வருவாய் தலைப்பு 20-03-02-99 வரையில் வரவு வைக்கப்படும் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு மேல் மாகாணத்தில் உள்ள எந்தவொரு பிரதேச செயலாளரின் அலுவலகத்திலும் பணம் செலுத்தப்படலாம். பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் ஒட்டப்படல் வேண்டும். ஒரு நிழற்பிரதி வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். இந்த பரிட்சையில் செலுத்தப்படும் கட்டணம் எந்தவொரு சூழ்நிலையிலும் முழுமையாக அல்லது பகுதியாக திரும்ப செலுத்தப்பட மாட்டாது. மேலும் முத்திரை அல்லது காசுக்கட்டளை ஏற்று கொள்ளப்படாது.

## 12. விண்ணப்பிக்கும் முறை:

(a) A4 அளவிலான காகிதத்தின் இருபுறமும் பயன்படுத்தி சுயமாக தயாரிக்கப்பட்ட மற்றும் நிரப்பப்பட்டிருக்கும் இணைக்கப்பட்ட மாதிரியான விண்ணப்பப்படிவமாக இருக்க வேண்டும். இலக்கம் 01 முதல் 04 பத்திகள் முதல் பக்கத்தில் இருக்க வேண்டும் மற்றும் இலக்கம் 05 முதல் பிற பக்கங்களில் இருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் விண்ணப்பங்கள் முழுமையற்ற தகவல்களுடன் இருத்தல், பொருந்தாத விண்ணப்பங்கள் என்பன முன் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படும். உங்களுடைய விண்ணப்பத்தின் புகைப்பட பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(b) விண்ணப்பத்தை தயாரிக்கும்போது தலைப்பு சிங்களம்/தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும்.

(c) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா), 109, பிரதான வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு **08.03.2019** ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். கடுத உறையின் இடதுபுற மேல்பகுதியில் **மேல் மாகாண அரச சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் தரம் 1 வகுப்பு 111 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் -2019** எனக்குறிப்பிடவும். இத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(d) விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறியத்தரப்படாது. அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டமை தொடர்பில் மேல் மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவிக்கப்படும். அத்தகைய அறிவிப்பின் 07 நாட்களுக்குப் பின்னர் கிடைக்கப்பெறவில்லை எனில், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்படல் வேண்டும். பெயர், முகவரி, பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் பற்றுச்சீட்டு பிரதியுடன் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் தொடர்புகொள்ள வேண்டும்.

(e) விண்ணப்பதாரியின் கையொப்பம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் எந்தஒரு நிறுவனத்திலும் கடமையாற்றுவாராயின் தனது நிறுவனத்தின் தலைவரால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் முன்னிலையில் ஒப்பமிட்டு சான்றழிக்கப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கப் பாடசாலை அதிபர், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதியரசர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணையர் அதிகாரி, அரசு அல்லது மாகாண அரசாங்க அலுவலர் ரூ.498,960 அதிகமாக வருடாந்த சம்பளம் பெறுபவர். ஒரு பௌத்த ஆலயத்தை சார்ந்த ஒரு மதகுரு அல்லது எந்தவொரு மதத்தினையும் சார்ந்த மதகுருவாகவும் இருப்பவர்..

**13. பரீட்சைக்கு தோற்றுதல்:**

(a) மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு சரியான விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுமதி அட்டைகளை விநியோகிக்கும். விண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார். முதல் நாள் அனுமதி அட்டையை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்க தவறிவிட்டால், பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

(b) பரீட்சைகளை நடத்துவதில் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு விண்ணபதாரிகள் கீழ்படியவேண்டும். அத்தகைய விதிகள் அல்லது நிபந்தனைகளை மீறினால் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்

**14. விண்ணபதாரியின் ஆளடையாளம் :**
மண்டபத்தில் தனது அடையாளத்தை விண்ணபதாரி அவசியம் நிரூபிக்கவேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் எந்தவொன்றையும் மேற்பார்வையாளருக்கும் சமர்ப்பிக்க முடியும்.

i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ii) குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட வலிதுள்ள கடவுச்சீட்டு

**15. தவறான தகவல்கள் வழங்கல்:**

ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனில், அவருடைய விண்ணப்பம், தேர்வின் போது அல்லது அதற்கு முன்னர் எந்த நிலையிலும் ரத்து செய்யப்படும். ஒரு விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட விவரங்களில் ஏதாவது ஒரு வகையில் அவரது அறிவுடன் தவறாகக் காணப்பட்டால் அல்லது அவர் எந்தவொரு உண்மையையும் மறைத்திருந்தரல், அவர் / அவள் எவ்வேளையிலும் பொது சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

**16. பரீட்சை நடைமுறை:**

i. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடாத்தப்படும்
ii. விண்ணப்பதாரி அனைத்து பாடங்களிற்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்

**17.** பரீட்சைக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ www.psc.wp.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் தனிப்பட்ட முறையிலும் அறியத்தரப்படும்.

**18.** மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு இந்த விண்ணப்ப அறிவிப்பு மூலம் வெளியிடப்பட்ட / வெளிப்படாத அனைத்து விபரங்கள் தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**19**. மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவானது விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலின்படி தகைமைகளை கொண்டுள்ள மற்றும் சரியாக பரீட்சைக் கட்டணம் செலுத்திய அனைத்து விண்ணப்பதாரிகளையும் பரீட்சை எழுத அனுமதிக்கும். பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவொரு முன் அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்படும் இழப்பு அல்லது தாமதம் குறித்து எந்த முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படாது. அனுமதி அட்டை வழங்குவதனால் தகுதியுள்ளவர் என கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தேவையான தகுதிகளை கொண்டிருக்கவில்லை என்று நேர்முகப்பரீட்சையின்போது தெரியவந்தால் உடனடியாக நிராகரிக்கப்படும்.

**20**. இந்த அறிவிப்பின் ஆங்கில மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் ஏதாவது முரண்பாடு இருந்தால், சிங்கள மொழி அறிவிப்பே சரியானதாக கொள்ளப்படவேண்டும்.

**21**. இந்த அறிவிப்பினையும் விண்ணப்பத்தினையும் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் www.psc.wp.gov.lk.என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

எம்.ஜி.ஏ.திலகரத்ன
செயலாளர்
மாகாண அரச சேவை ஆணைக்குழு
மேல் மாகாணம்
2019.01.29

**மாதிரி விண்ணப்பம்**

**மேல் மாகாண அரச சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் உதவிப் பணிப்பாளர் தரம் 1 வகுப்பு 111 க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் -2019**

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (எண்ணை கூட்டினுள் எழுதுக)
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

- நகரமும் நகர இலக்கமும்: கொழும்பு - 1

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)……………………………………………
(Ex: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
……………………….................................. (Ex: GUNAWARDHANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) - ……………………………………………………….

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்-

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):……………………………………

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்):……………………………………………..

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:

i. சிங்களத்தில்/ தமிழில் -……………………………………………..

ii. ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் - ……………………………………..

2.4 தொலைபேசி இலக்கம்-…………………………………………...

3.0 3.1 பால் – (பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)
ஆண் - 0
பெண் - 1

3.2 நிரந்தர வதிவிட மாவட்டம் – கொழும்பு -1
கம்பஹா -2
களுத்துறை -3 (பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

3.3 பிரதேச செயலாளர் அலுவலகம்-…………………………………….

3.4 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் - ……………………….

4.0 4.1 விவாகம் – விவாகமானவர் -2, விவாகமாகாதவர் -1
(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.2 பிறந்த தேதி வருடம்: மாதம்: நாள்:

4.3 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது : வருடம் மாதம் நாட்கள்

5.0 அறிவித்தலின் இல.05 இன்படியான கல்வித் தகைமைகள்:

i. பட்டம் :-
ii. பட்டப்பின் டிப்ளோமா :-
iii. NVQ தகுதி :-
iv. வழங்கிய நிறுவனம் :-
v. சான்றிதழின் வழங்கு திகதி :-

6.0 அறிவித்தலின் 05.3(b) ம் பகுதிக்கமைவாக விண்ணப்பிப்பவர் எனின்
எத்துறையின் 02 வருட சிறந்த தொழில் அனுபவத்தை கொண்டுள்ளீர் ..................
தொழில்துறை அனுபவம் குறித்து விளக்குக .................................................................

7.0 விண்ணப்பதாரி தற்போது மேல் மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் உள்ளவர் மற்றும் அறிவித்தலின் 5.4, 5.5 பகுதிகளுக்கமைய விண்ணப்பிப்பவராயின் 08 முதல் 10 வரை பூர்த்தி செய்யவும்

8.0 சேவை விபரம்

i. வகுப்பு 2 தரம் 1 இற்கு நியமிக்கப்பட்ட திகதி ....................
   வினைத்திறன் தடைகாண் பரீட்சை சித்தியடைந்த திகதி ........................
ii. தரம் 1 இற்கு நியமிக்கப்பட்ட திகதி ...................
   வினைத்திறன் தடைகாண் பரீட்சை சித்தியடைந்த திகதி ........................

iii. விண்ணப்ப முடிவுத் திகதியில் சேவைக் காலம் ...................

iv. மேல் மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி ....................

9.0 **08.03.2019** முன்னரான மூன்று வருடங்களில்

i. அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீரா?
ii. சம்பளமற்ற விடுமுறை / சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளீரா?
iii. சிறந்த விணைத்திறனுடைய சேவைக்காலத்தை கொண்டுள்ளீரா?
iv. ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்படுத்தப்பட்டு சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளீரா?

10.0 பற்றுச்சீட்டின் விபரம் –
பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் ……...........................………………
பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்-……………………………………………………….

| பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். |
|---|

11.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(a) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ள அனைனத்துப் பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.
(b) இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது என தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன்.
(c) மேலும், மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் சட்டதிட்டங்களுக்குட்படுவேன், பரீட்சை நிபந்தனைகளுக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு நான் உடன்படுகிறேன்.
(d) தகவல்கள் எதுவும் பின்பு மாற்றப்படமாட்டாது.

தேதி………............ ……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி.........................................................................என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அத்தன் பற்றுச் சீட்டினை இதனுடன் இணைத்துள்ளார் எனவும், எனது முன்னிலையில் ..................................தேதி ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

……………………………..……………………......
ஒப்பமும் முத்திரையும்

தேதி- ……………………………….
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர்-…………………………….
பதவி-…………………………….
விலாசம்-………………………………...

அறிவித்தலின் 5.4 மற்றும் 5.5 இற்கமைய விண்ணப்பிப்பவர்கள் பின்வருவனவற்றை பூர்த்தி செய்வது அவசியமாகும்

13. <u>நிறுவனத் தலைவரின் அத்தாட்சி</u>
(பொருத்தமற்றதை நீக்கிவிடவும்)

இவ் விண்ணப்பதாரி திரு/திருமதி/செல்வி........................................................................... தற்போது இந்நிறுவனத்தில் ...........................ஆம் தேதி முதல் வகுப்பு 2 தரம் 1/11 இல் கடமையாற்றுகிறார். அவரது சேவை சிறப்பான 05 வருடங்களைக் கொண்டுள்ளது, அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார், எவ்வித சம்பளமற்ற விடுமுறைகளையும் பெற்றிருக்கவில்லை, எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இனியும் எடுக்கப்படாது எனவும்
இவரது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும், சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………...................................

தேதி- ………………………………. நிறுவனத் தலைவரது ஒப்பமும் முத்திரையும்

14. <u>திணைக்களத் தலைவரது அத்தாட்சி</u>

திரு/திருமதி/செல்வி.......................................................................... என்பவரது விண்ணப்பம் மேல் மாகாண கொளரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட மேல் மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமணைக் குறிப்பிற்கமைய அமைந்துள்ளதால் சிபாரிசு செய்கிறேன்.

…………………………...................................

தேதி- ………………………………. திணைக்களத் தலைவரது ஒப்பமும் முத்திரையும்

15. <u>அமைச்சு செயலாளரின் (மே.மா) சிபாரிசு</u>
இவ் விண்ணப்பத்தை சிபாரிசு செய்கின்றேன்

…………………………...................................

தேதி- ………………………………. அமைச்சு செயலாரளின் (மே.மா) ஒப்பமும் முத்திரையும்

16. <u>பிரதம செயலாளரின் (மே.மா) சிபாரிசு</u>
இவ் விண்ணப்பத்தை சிபாரிசு செய்கின்றேன்

…………………………...................................

தேதி- ………………………………. பிரதம செயலாரளின் (மே.மா) ஒப்பமும் முத்திரையும்